DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 373/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | சிவசுப்பிரமணியன் |
|---|---|
| Father / Husband Name | ஜெயராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.03.2026**

**முதல் விசாரணை:**

நான் சர்வசேவா நிதி நிறுவனத்தின் மேளாண்மை இயக்குனர் ஆவேன். மேற்படி நிறுவனத்தின் சார்பில் நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையைது தான். அதில் உள்ள விவரங்களை எனக்கு தெரியும். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். கீழ் கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளேன்.

1. 01.09.2025 தேதியிட்ட 907842 என்ற எண் கொண்ட இந்தியன் வங்கி தில்லை நகர் கிளையினால் வழங்கப்பட்ட எதிரி எனது நிறுவனத்திற்கு கொடுத்த அசல் காசோலை மசாஆ.1 ஆகவும்

2. 02.09.2025 தேதியிட்ட கரூர் வைசியா வங்கி அச்சிறுப்பாக்கம் கிளையினால் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் மசாஆ.2 ஆகவும்

3. 12.09.2025 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் மேற்படி அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் மசாஆ.3 ஆகவும்

4. 16.09.2025 தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் மசாஆ 4 ஆகவும்

5 26.09.2025 தேதியிட்ட எதிரி எனது நிறுவனத்திற்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் மசாஆ 5 ஆகவும்

6. 25.02.2020 தேதியிட்ட எனது நிறுவனம் மற்றும் எதிரிக்கு இடையே ஏற்பட்ட கடன் ஒப்பந்த பத்திரம் அசல் மசாஆ 6 ஆகவும்

7. 14.06.2025 தேதியிட்ட சர்வ சேவா நிதி நிறுவனத்தின் சிறப்பு நிர்வாக குழுவில் ஏற்பட்ட தீர்மானம் நகல் அசலுடன் ஒப்பிட்டு அது மசாஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.